**இறக்குமதி செய்யப்பட்ட**

ஃ பலவித பரிசுப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், தையல் வேலைகளுக்குரிய சகல பொருட்கள்.
மற்றும்
ஃ யப்பான்] நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பலதரங்களிலுமுள்ள காதுகேட்கும் கருவிகள் யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

**கிருபா கிவ்ற் கவுஸ்**
KIRUBA GIFT HOUSE,
சோதிட விலாஸ் கட்டிடம்
46, பெரியகடை - யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 8083



பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No QB/8945/78

மலர்: 21 ஆனி: 1 றஜப்: 19 இதழ்: 116
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 15-6-79



**சிங்கள வகுப்புக்கள்**

பிரபல சிங்கள ஆசிரியர்களால் போதிக்கப்படுகின்றன.
● 1ம், 2ம், 3ம் தர உத்தியோக தேர்ச்சிப்பரீட்சை [PROFESSIONAL] ● பேச்சு சிங்களம் [ORAL], ● க. பொ. தராதர (சாதாரண) விருப்பத்திற்குரியது
தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் போதனை.
விபரங்களுக்கு:
பி. எம். தாஸ்,
180 பிலமினு லொட்ஜ்,
2ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 2762


சாதிக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க

# யாழ். குடாநாடு முழுவதும் இன்று கறுப்புப்பட்டி இயக்கம்

## அறவழிப் போராட்டக் குழு நடத்துகின்றது

[யாழ்ப்பாணம்] யாழ் குடாநாட்டில் நிலவி[illegible]சாதிப்பாகுபாடுகள், தீண்டாமைக் கொடுமைகள் போன்றவற்றை ஒழித்து தமிழ்மக்கள் மத்தியில் ஒருமைப்பாட்டையும் சமரச மனப்பான்மையையும் உருவாக்கும் நோக்கத்துடன் கறுப்புப் பட்டி அணியும் இயக்கம் ஒன்றை சாவகச்சேரி அறவழிப் போராட்டக்குழு இன்று நடத்துகின்றது.

இதையடுத்து உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றையும் இவர்கள் நடத்தவிருக்கின்றனர்.

தமிழ்மக்கள் மத்தியில் இருந்து சாதிக் கொடுமைகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் அறவே, அகற்றும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் இம் முயற்சிக்கு ஆதரவு தரும்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அமிர்தலிங்கம் உள்பட தமிழ் பிரமுகர்களும் பொதுநல ஸ்தாபனங்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன. நேற்றுமுழுநாளும் யாழ் குடா

[6ம் பக்கம் பார்க்க]

## தமிழர் வாழ்வு சிறக்க இயக்கம் உதவட்டும்

### உதவி மேயர் அறிக்கை

[யாழ்ப்பாண]

"காலத்துக்குக்காலம் யாழ் குடாநாட்டில் சாதியின் பெயரால் நிகழும் அட்டூழியங்கள் அனைத்துக்கும் ஒரு முடிவு கட்ட முழுத் தமிழ் இனமும் ஒன்றுபட்டு பரந்த அளவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்திருப்பது பாராட்டக்குரிய பெருஞ் செயலாகும்"

இவ்வாறு யாழ் மாநகராட்சி மன்ற துணைமுதல்வர்

(6-ம் பக்கம் பார்க்க)

நல்லெண்ணச் சுற்றுலா

## வடக்கிலிருந்து கேகாலைக்கு 200 மாணவர் புறப்பட்டனர்

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் கல்விமாவட்டத்தைச் சேர்ந்த 200 மாணவர்கள் நல்லெண்ணச்சுற்றுலாவொன்றினை மேற்கொண்டு நேற்றுக் காலை கேகாலைக்குப் புறப்பட்டுச் சென்றனர். இக்குழுவில் 150 தமிழ் மாணவர்களும் 30 முஸ்லிம் மாணவர்களும் 20 சிங்கள மாணவர்களும் உள்ளனர்.

குழுவுக்கு யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகர் தலைமை தாங்கி அழைத்துச்சென்றார். மாணவக் குழுவை, யாழ் ரயில்நிலையத்தில்வைத்து யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். ஜெகநாதன், உதவிசமூக சேவை ஆணையாளர் திரு. கே. கெங்காதரனும், கல்விப் பகுதி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் வாஞ்சையுடன் வரவேற்று அன்புடன் வழியனுப்பிவைத்தனர்;

மாணவர்களை, கேகாலை ரயில்நிலையத்தில் வைத்து கேகாலை மாவட்ட அமைச்சர்

[6-ம் பக்கம் பார்க்க]

## தஞ்சை - நாகை தேர்தல்

சென்னை, ஜூன் 14

இம்மாதம் 17ம் திகதி நடைபெறும் தஞ்சாவூர், நாகபட்டினம் லோகசபை தேர்தல்களின் முடிவுகள் 18ம் திகதி திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

18ம் திகதி காலையிலேயே வாக்குகள் யாவும் மத்தியநிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டு எண்ணுவது ஆரம்பிக்கப்படும். இரவு 9 மணிக்குமுன் வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டு முடிவு அறிவிக்கப்படும் என்று தெரிகிறது.

அரசுக்கு எதிராக துண்டுப் பிரசுரம்

## 2 நயினை வாலிபர்களுக்கும் றிமாண்ட்

[யாழ்ப்பாணம்] அரசாங்கத்துக்கு எதிரானதும், இனசமூகங்களுக்கிடையே பிரிவினையை வளர்க்கக்கூடியதுமான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட நயினாதீவுவாலிபர்கள் இருவரும் இம்மாதம் 27ம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

நயினாதீவைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன், சிவராஜசிங்கம் ஆகிய இருவரும் கொழும்பு மருதானைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு மாளிகாவத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதவான் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறும் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர் செய்யுமாறு பணித்திருந்தார்.

நேற்று சந்தேகநபர்களை யாழ் மேல் நீதிமன்றத்தில் பொலிசார் ஆஜர் செய்த போது குற்றப்பத்திரிகை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாததால் இம்மாதம் 27ம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் எஸ் நடராஜா, ஜிம்மி இராஜரத்தினம். எஸ் கே மகேந்திரன், கே கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் ஆஜராகினர். [கு]


**தேவை**

1. பாவு தயாரிப்பாளர்கள்
2. கோர்வையாளர்கள்
3. நெசவாளர்கள் (மின்தறி)

மேற்படி தொழில்களில் குறைந்த பட்சம் 3 வருட அனுபவமுள்ள பெண் தொழிலாளர்கள் தேவை.
தகமையுள்ளோர் சான்றிதழ்களுடன் 18-6-79 அன்று காலை 9-00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.
வேதனம் தகமைக்கேற்ப வழங்கப்படும்.

LINATEX INDUSTRY LTD,
2739 புத்தூர்.


பஸ்கடத்தல், கொள்ளை, தாலிக்கொடி பறிமுதல் போன்ற

## பல குற்றச் செயல்களுக்குப் பொறுப்பாக இருந்துள்ளனராம்

### பிடிபட்ட இளைஞர்கள் பொலிஸில் வாக்குமூலம்

[யாழ்ப்பாணம்] வடபகுதி வன்செயல்களிலும் கொள்ளை- வழிப்பறிகளிலும் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பொலிசாரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் சில பஸ் கொள்ளைகளிலும் தாலிக்கொடி கொள்ளைகளிலும் சம்பந்தப்பட்டிருந்ததை விசாரணையில் ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது யாழ். குற்றத் தடுப்புப் பிரிவு சப் இன்ஸ்பெக்டர்களான பிரேமதாசா முத்துபண்டா ஆகியோர் தலைமையில் கான்ஸ்டபிள்களான மிஸ்கின், செனிவிரத்தின ஆகியோர் முல்லைத்தீவிற்குச் சென்று மூன்று சந்தேகநபர்களை கைது செய்தனர் கொள்ளைச் சம்பவங்களின் போது பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் உள்ளூர்த் துப்பாக்கி ஒன்றையும் பொலிசார் மீட்டுள்ளனர். விசாரணையின் பொருட்டுக் கைதுசெய்யப்பட்ட மூவரையும் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டனர்.

யாழ் தலைமைக் காரியாலயம் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ரூனி குணசேகரா தலைமையில் பூநகரிக்குச் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் இன்னும் ஒரு சந்தேக நபரையும் பூநகரியில் வைத்துக் கைசெய்துள்ளனர். கொள்ளைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் சாம்பல் நிற ஆஸ்டின் ஏ 40 [சி எல் 4856] கார் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர். சில மாதங்களுக்கு முன் கிளிநொச்சியில் இருந்து பூநகரிக்குச் சென்ற மெயில் பஸ்ஸில் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைத்துப்பாக்கியால் சுட்டுக் காயம் விளைவித்துவிட்டுதபால் பையை அபகரித்தது. பஸ் மூலம் சாவகச்சேரி வங்கிக்கு எடுத்துச் செல்லப்பட்ட பூநகரி ப, நோ. கூ. சங்கத்துக்குரிய 24,000 ரூபாவை துப்பாக்கிமுனையில் கொள்ளையடித்து டஸ்ஸைத் திசை திருப்பி நாவற்குழிச் சந்திவரை கொண்டு சென்றது. இருபாலைச் சந்தியில் பஸ்ஸை மறித்து பஸ் கண்டக்டரிடமிருந்த 36 ரூபாவை துப்பாக்கி முனையில் கொள்ளையடித்தது, ரோயல் டிஸ்பென்சரி உரிமையாளரும் பாரியாரும் பலாலி வீதிவழியாக காரில் சென்ற போது துப்பாக்கி முனையில் காரைமறித்து 25,000 ரூபா பெறுமதியான தாலிக்கொடியையும் கைக்கடிகாரத்தையும் கொள்ளையடித்தது ஆகிய நாலுகுற்றச் செயல்களையும் தாமே புரிந்துள்ளதாக சந்தேநபர்கள் ஒத்துக்கொண்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

ரோயல் டிஸ்பென்சரி உரிமையாளரின் பாரியாரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட தாலிக்கொடியும் கைக்கடிகாரமும் தரைப்பெட்டி

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்


### தேவை

ஊதுபத்தி உருட்டுவதில் அனுபவமுள்ள பெண்கள், திறமையான விற்பனையாளர், மர விளையாட்டுப்பொருள் வேலையாள் ஆகியோர் உடனே தேவை. கடித மூலம் விண்ணப்பிக்கவும். முகாமையாளர், செல்வா புரடக்ஸ், நல்லூர். 2729

### பயிற்சி

Transistor ரேடியோ பயிற்சி ஆரம்பத்திலிருந்து அளிக்கப்படும். ரேடியோவைப் பற்றி எதுவுமே தெரிந்திருக்கத் தேவையில்லை விபரங்களுக்கு: National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 2752

### WANTED

"Wanted an Audit Clerk Trainee with full knowledge in Book-keeping & Accounts Preference will be given for those living within the limits of the Municipality. Apply with two recent testimonials stating salary required". Advt No. 2749, C/o Eelanadu Ltd, Jaffna. 2749


த. சண்முகராஜா,
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்,
கோண்டாவில்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கோண்டாவில் கனகசிங்கம் குலசேகரம் என்பவரின் மரணசாதனம் சம்பந்தப்பட்ட விஷயத்தில்

மரணமெய்தியவர்
குலசேகரம் கைம்பெண் சிவபாக்கியம், கோண்டாவில்.

மனுதார்

மரணசாதன) இல: 3441
நியாயாதிக்கம்)

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தைஎண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

க்கறையுள்ள ஆள் எவரேனும் 1979-ம் ஆண்டு ஆடி மாதம் 6-ந் திகதி முற்பகல் 10-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்டபின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

1979-ம் ஆண்டு ஆனி மாதம் 13-ந் திகதி

நீதிமன்றத்தின் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்
2759

## அதிர்ஷ்ட லாபம்


அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் தொண்டர் சபையினரால் நண்பர்கட்கு மட்டும் 11-6-79இல் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசில் பெற்ற எண்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1-வது பரிசு | 6586 |
| 2-வது பரிசு | 5708 |
| 3-வது பரிசு | 1003 |
| 4-வது பரிசு | 353[illegible] |
| 5 வது பரிசு | 1865 |
| 6-வது பரிசு | 87 |
| 7-வது பரிசு | 4424 |
| 8-வது பரிசு | 2103 |
| 9-வது பரிசு | 2996 |
| 10-வது பரிசு | 7404 |
| 11-வது பரிசு | 3844 |
| 12-வது பரிசு | 2908 |
| 13-வது பரிசு | 3593 |
| 14-வது பரிசு | 4328 |
| 15-வது பரிசு | 2840 |
| 16-வது பரிசு | 4650 |
| 17-வது பரிசு | 1609 |

(2756)


## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற, கோண்டாவில், சபாபதி கணபதிப்பிள்ளை என்பவரின் மரணச்சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்
டாக்டர் ஜி. பரராஜசிங்கம், கொக்குவில்.

மனுதார்

மரணச்சொத்து இல. 3121
நியாயாதிக்கம்)

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலேயுள்ள பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு இதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ந் திகதி முற்பகல் 10-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1979-ம் ஆண்டு ஆனி மாதம் 13-ந் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

த. சண்முகராஜா,
சட்டத்தரணி,
கோண்டாவில். 2760


யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### அங்குரார்ப்பணக் கூட்டம்

16-6-79 சனிக்கிழமை காலை 9 மணி
இடம்: கல்லூரிப் பிரார்த்தனை மண்டபம்
மேற்படி கூட்டத்துக்கு பெற்றோர்கள்,
பழைய மாணவர்கள், பாடசாலை நலன்விரும்பிகள்
அனைவரும் வருகை தந்து பூரண ஒத்துழைப்பு நல்குக.
பொ. ச குமாரசுவாமி,
அதிபர்

2750


## இன்றைய பலன்

ஆனிமாதம் 1-ம் திகதி
[வெள்ளிக்கிழமை]
(15-6-1979)

மேடம்: குருவின் ஆசியுடன் குறிக்கோளும் வெற்றி காணும், குன்றென நிமிர்ந்து நிற்பீர், குவிந்திடும் புகழும்.

இடபம்: சுகபோக தினம், சொகுசான வாழ்க்கையையே விரும்புவீர்கள், ஆடம்பரமான ஆடைகளில் மனநாட்டம் செல்லும், படித்தவர்களின் தொடர்பினால் பயன் அடைவீர்கள், எல்லாம் இன்பமயம்.

மிதுனம்: இதயத்தில் இனிமை துள்ளும். பகைவர்கள் பணிவர், வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு, பரந்த நோக்குடன் செயற்படுவதன் மூலம் பொதுமக்களின் பாராட்டும் கிடைக்கும்.

கடகம்: எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும், அவசர முடிவு ஆபத்தில் சிக்கவைக்கலாம், குடும்பத்திலும் பதட்டநிலை தென்படும், இறை நம்பிக்கையும் எதையும் தாங்கும் இதயமும் வேண்டும்.

சிங்கம்: காதல் விவகாரங்கள் தலைதூக்கும், இனிமையான சம்பவங்கள் இடம் பெறும், களஸ்திர வழியால் பொருள் வரவுக்கும் இடம் ஏற்படலாம், பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும், கண்ணியமான தினம்.

கன்னி: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும், அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். கடற்றொழிலாளர்கள் கவனம் செலுத்தவும், சிலருக்கு நூதன ரோகம் தென்படலாம்.

துலாம்: புதிய நம்பிக்கையுடன் வாழ்க்கை ஆரம்பிப்பீர்கள், தெய்வத்தின் அருள் கிடைக்கும், தங்கள் செயற்திறமை மற்றவர்களைத் திகைக்க வைக்கும், தொழிலிலும் வெற்றியுண்டு.

விருச்சிகம்: புண்ணிய காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும், பொதுத்துறையில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், இல்லத்திலும் இனிமைக்கு இடம் உண்டு. மங்களகரமான தினம்.

தனுசு: நிதிநிலையில் விருப்பத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்றது, வணிகர்களாயின் அதிக ஆதாயத்தைப் பெறுவார்கள், புதுமையான காரியங்களில் மனதைச் செலுத்துவீர்கள், புத்திரர்களாலும் புகழ் குவியும்.

மகரம்: பணத்தை அள்ளி விசினாலும் பலன் பாழாகத்தான் இருக்கும், சக தொழிலாளர்களுடன் மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளவும், புனைந்துரைகளால் மனம் புண்படலாம், பொறுமையே வேண்டும்.

கும்பம்: இன்னலின் பின்னலால் வேதனைப்படுவீர்கள். நீண்டகாலத் தொடர்பொன்று இன்று துண்டிக்கப்படலாம், அவசர முடிவுக்கு வராது நன்றாகச் சிந்தித்த பின்பு செயலாற்றவும். சுமாரான தினம்.

மீனம்: வாழ்க்கை மலர் தூவிய மஞ்சமாகக் காட்சியளிக்கும், இன்பத்தின் எல்லைக்கே இழுத்துச் செல்லப்படுவீர்கள், சுற்றுலா மேற்கொள்ளும் விருப்பம் மேலிடலாம் தலைச்சிறப்புக்கும் இடம் உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## சிறையிலுள்ள தமிழ் இளைஞரை விடுதலை செய்க
### புகைவண்டி ஊழியர் சங்கக் கூட்டத்திற்கு பிரேரணை வருகிறது

[யாழ்ப்பாணம்]

மதவாச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் வவனியாவுடன் இணைக்க அரசு எடுக்கும் முயற்சியை உடன் நிறுத்துமாறு கோரும் பிரேரணை ஒன்று இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள புகைவண்டிப்பகுதி ஊழியர் சங்கத்தின் 15வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நல்லூர் கல்யாணமண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணித்தலைவரும், மூளாய்த்தீவு எம். பி யுமான திரு. சே மா. செல்லத்தம்பு, கோப்பாய் எம் பி திரு சி கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கூட்டத்திற்கு வரும் ஏனைய சில பிரேரணைகள் வருமாறு:

சந்தேகத்தின் பேரில் சிறையில் வைத்திருக்கும் தமிழ் இளைஞர்களை உடனடியாக விசாரணைக்குட்படுத்தி குற்றவாளிகளாகக் காணப்படின் தண்டனை வழங்கவேண்டும். இல்லையேல் உடனே விடுதலை செய்யவேண்டும்.

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க உடனடியாக 200 ரூபா சம்பள உயர்ச்சியும், ஒவ்வொரு வாழ்க்கைச் செலவுப்புள்ளிக்கும் 10 ரூபா கூடுதலாகவும் வழங்கவேண்டும்.

வடக்கில் மூடப்பட்ட வங்கிகளை மீண்டும் திறந்து பொது மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

[இ]

## மிளகாய் கொள்வனவு விலை 8 ரூபாவாக அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

விற்பனைத் திணைக்களம், 1ம்தர செத்தல் மிளகாயின் கொள்வனவு விலையை இம்மாதம் 2ம் தேதி முதல் 7-50 சதத்திலிருந்து 8 ரூபாவாக அதிகரித்துள்ளது

உத்தியோகத்தர்கள் நேரடியாக விற்பனைத்திணைக்கள கொள்வனவு நிலையங்களில் கொள்வனவு செய்வார்கள்.

இதுதொடர்பாக உதவி அரசாங்கஅதிபர் காரியாலயங்களிலும், யாழ் கஸ்தூரியார் வீதியிலுள்ள விற்பனைத் திணைக்கள உதவி ஆணையாளர் காரியாலயத்திலும் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்

இங்கு கொள்வனவு செய்யப்படும் மிளகாய், யாழ்ப்பாணத்திலேயே விநியோகிக்கப்படும் என விற்பனைத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். [எ]

## 'எம்மிடம் பிரச்னை இல்லை' என்ற கணவர் தற்கொலை!

[யாழ்ப்பாணம்]

இனிமேல் அடிக்கமாட்டேன் எம்மிடம் பிரச்னை இல்லை' என்று மனைவியிடம் கூறியவர் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலைசெய்து கொண்டார்.

யாழ். கச்சேரியடியைச் சேர்ந்த சுயம்பு அரசரத்தினத்தின மரணவிசாரணையைப் பெற்றுக்கொண்டவிபரம் தெரியவந்தது.

யாழ் மரணவிசாரணை அதிகாரிதிரு எஸ்.எஸ்.பிரகாசின் மரணவிசாரணை நடத்தினார்.

திருமணமாகி 2 பிள்ளைக்கு தந்தையான இவர் ஓமந்தையில் உள்ள காணியை பெற்றோருக்குக்கொடுத்து விட்டு, வேலையின்றி கஷ்டப்பட்டு வந்தாரென்றும் இதனால் தினமும் மதுபானம் அருந்தினாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது

சம்பவதினம் சமத்திலிருந்து திரும்பிவிட்டிற்குவந்து மனைவிக்கு 50 ரூபாவும் மற்றொருவருக்கு 25 ரூபா கடனையும் கொடுத்துவிட்டு நச்சுத்திராவகம் அருந்தினாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணையின்பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய மரதன் ஓட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய மாணவர்களின் மரதன் ஓட்டப்போட்டி நாளை சனிக்கிழமை காலை மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலிலிருந்து ஆரம்பமாகி வித்தியாலயம்வரை நடைபெறவிருக்கிறது

இப்போட்டியில் வெற்றி பெறும் மாணவருக்கு வித்தியாலயப் பழைய மாணவரும் முன்னர் வித்தியாலயத்தில் நடைபெற்ற போட்டிகளில் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து வெற்றியீட்டியவருமான திரு ஏ. எஸ். துரைசிங்கம் வழங்கிய வெள்ளிக் கிண்ணத்தை யாழ். மாநகரசபை உறுப்பினரும், வித்தியாலய அபிவிருத்திச் சபையின் உப தலைவருமான திரு. எஸ் தியாகராசா வழங்கிக் கௌரவிப்பார்.

இம்மாதம் 30ம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள வருடாந்தப் போட்டிகளின் முன்னோடியாகவே இப்போட்டிகள் நடைபெறுகின்றன (கு)

## நெடுங்கேணி வித்தியாலய அபிவிருத்திச்சபை

(யாழ்ப்பாணம்)

ஒரு பாடசாலையின் வளர்ச்சியிலோ, மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலோ ஆசிரியர்கள் மட்டும் அக்கறை எடுத்தால் போதாது எனவேதான் புதிய முறையில் அமைக்கப்படும் பாடசாலை அபிவிருத்திச் சபைகளில் பெற்றோர் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவ தலைவன் ஆகியோர் அங்கம் வகிக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நெடுங்கேணி மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய வித்தியாலய அதிபர் திரு ச. சச்சிதானந்தன் குறிப்பிட்டார். பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவாகினர். தலைவர்; திரு க. சச்சிதானந்தன், துணைத் தலைவர்: திரு. து. பரராசசிங்கம் இணைச் செயலாளர்கள்: திருவாளர்கள். த ம பீற்றர் பொன்கலன்ட், சி சரவணபவானந்தன். பொருளாளர்; திரு ச சிவராமகிருஷ்ணன்.

பதினைந்து பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது (கு)

# கொள்ளையரை இரு கார்களில் துரத்திச் சென்று காட்டினுள் பணப்பையுடன் கைப்பற்றினோம்

**செங்கலடி வங்கிக் கொள்ளை**

## கான்ஸ்டபிள் சாட்சியம்

[கொழும்பு]

செங்கலடி கிராமிய வங்கி கொள்ளை வழக்கு நேற்று முன் தினம் மூன்றாவது தினமாக கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. எல். எச். டி. சில்வா முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்ட போது ஏறாவூர் பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் திரு. அம்பரத்தின சாட்சியமளித்தார்.

அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

17-3-78 இல் ஏறாவூரில் கடமையாற்றினேன் சார்ஜனிடமிருந்து எனக்கு ஒரு கட்டளை கிடைத்தது லக்ஷ்மன் சில்வா பொறுப்பதிகாரியாகவிருந்தார். அவர் அப்போது பொலிஸ் நிலையத்திலிருக்கவில்லை இராமநாயக்காவும் அச்சமயம் என்னுடன் நின்றார். காலை 10 மணிக்கு கட்டளை கிடைத்தது.

### சீருடையின்றிச்செல்ல ஆயத்தமானோம்

கொள்ளை ஒன்று நடக்கவிருப்பதாகவும் சீருடையின்றி சாதாரண உடையில் இதனை அவதானிக்க ஆயத்தமாக இருக்கும்படியும் அக்கட்டளையில் தெரிவிக்கப்பட்டது. நானும், இராமநாயக்கவும் சாரம், சேட் அணிந்து சைக்கிளில் ஆயத்தமானோம்.

ஏறாவூர் வங்கியிலிருந்து காசை எடுத்துச்செல்லும் காசாளர் யார்? என்பதையும் அறியும்படி எமக்கு பணிக்கப்பட்டிருந்தது.

தனியார் கார் ஒன்றை ஒழுங்கு செய்து 2 இயந்திரத் துப்பாக்கிகளுடன் சார்ஜன்ட் ஆயத்தமானார். நானும் இராமநாயக்காவும் ஏறாவூருக்குச் சென்றோம். காசுகொண்டு செல்லும் காசாளர் யாரென அவதானித்தோம்.

நீதிபதி: நீங்கள்தான் பணம் கொண்டு போகிறீர்களா என்று அவர்களிடம் கேட்டீரா? இல்லை

நீதிபதி: அப்போ காசாளரை எப்படிக்கண்டுபிடித்தீர்? மனேஜரிடம் கேட்டேன்.

பின் நாம் வெளியேவந்து எமது சைக்கிள்களை சைக்கிள் திருத்தும் கடையில் நிறுத்தி விட்டு பார்த்து நின்றோம். அப்போது இருவரும் பணம் கொண்டு வருவதைக் கண்டேன். ஒருவர் நீல ஷேட் அணிந்து பணப்பையுடன் வந்து சைக்கிளில் செங்கலடிப் பக்கம் சென்றார். மற்றவரும் சென்றார். நீலஷேட் அணிந்தவரே கணேசலிங்கம், மற்றவர் விநாயகமூர்த்தி, வலது புறமாக சைக்கிள் கைப்பிடியில் பணப்பையைக்கொழுவிக் கொண்டு கணேசலிங்கம் சென்றார். (பையை சாட்சி அடையாளம் காட்டினார்)

பின்னர் இராமநாயக்க அவர்களுக்கு முன்பாக 10யார் தூரத்திலும், நான் 10 யார் பின்னாகவும் சைக்கிளில் சென்றோம்.

ஏறாவூரிலிருந்து செங்கலடி செல்லும் பாதையில் ஒரு குறுக்குவீதி உண்டு இது ஏறாவூர் வங்கியிலிருந்து சுமார் 1/2 மைல் தொலைவில் இருக்கிறது. அச்சந்தியிலிருந்து 1/4 மைல் தொலைவில் சாந்தி தியேட்டர் இருக்கிறது. அந்த ரோட்டில் இடதுபக்கமாக கார் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. அக் கார் சாந்தி தியேட்டரிலிருந்து சுமார் 25 யார் தூரத்தில் நின்றது. தியேட்டர் வலது புறத்தில் உளது மூவர் அக்காரின் பின்புறமாக சாய்ந்துகொண்டு நின்றனர். அப்போதுகார் வாழைச்சேனைப் பக்கம் நோக்கியபடி நின்றது நீலமும் வெள்ளை நிறமும் கொண்டது அக் கார் இராமநாயக்க அக்காரைத் தாண்டிச்சென்றார். அப்போது பணத்துடன் சென்றவர்கள் காருக்கு 10,15 அடி பின்னால் சென்றுகொண்டிருந்தனர். கணேசலிங்கம் வீதியில் இடதுபுறமாக கார் நிறுத்தப்பட்டிருந்த பக்கமாகவே சென்று கொண்டிருந்தார். அவருக்கு வலப்பக்கமாக விநாயகமூர்த்தி சென்று கொண்டிருந்தார்.

### பரமதேவா பிஸ்டலை நீட்டியபடி...

நீளக்காற்சட்டை அணிந்த அம் மூவரும் சைக்கிளில்வரும் இவர்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வாழைச்சேனைப் பக்கமாக நடக்க ஆரம்பித்தனர். பரமதேவா பிஸ்டல் ஒன்றை அவர்களை நோக்கி நீட்டி சைக்கிளைத் தள்ளினார். காசுடன் சென்றவர் அப்போது ரோட்டில் விழுந்தார் எதிரி பிஸ்டலைக்காட்டியபடி சைக்கிளிலிருந்து பணப்பையை எடுத்தார். (சாட்சி முதலாம் எதிரியை அடையாளம் காட்டினார்.)

நான் சைக்கிளைப்போட்டு விட்டு ஓடிச்சென்று அவரைப் பிடித்தேன். அச்சமயம் மற்றைய இருவரில் ஒருவர் பிஸ்டல் போன்ற ஒன்றை என்னை நோக்கி நீட்டினார் அவர் இரண்டாம் எதிரி (சாட்சி 2ம் எதிரியையும் காட்டினார்).

அப்போது நான் பின்புறமாக பாய்ந்தேன்.

முதலாம்) எதிரி காசாளரை நோக்கி நீட்டிய பிஸ்டலையும் 2ம் எதிரி தன்னை நோக்கிநீட்டியதையும் சாட்சி அடையாளம் காட்டினார்).

### இராமநாயக்க என சத்தமிட்டேன்

நான் அப்போது "இராமநாயக்க, இராமநாயக்க" என்று சத்தமிட்டேன். அவர் சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடிவந்தார் இராமநாயக்க முதலாம் எதிரியின் ஷேட் கொலரில் பிடித்துபின்புறமாக இழுத்தார். அப்போது முதலாம் எதிரியின் கையில் பணப்பை இருந்தது.

முதலாம் எதிரி அவரைத் தள்ளிவிட்டு பிஸ்டலை அவரை நோக்கி நீட்டினார் அப்போது இராமநாயக்க பின்புறமாக பாய்ந்தார்.

அந்தநேரம் காரினுள் நாலாம் எதிரி இருந்ததை நான் பார்த்தேன், சாரதி இருக்குமிடத்தில் அவர் இருந்தார் அங்கு நின்ற மற்றையவர் 3ம் எதிரி 3ம் எதிரி இச்சம்பவத்தில் எதிலாவது ஈடுபட்டதை நான் காணவில்லை.

இராமநாயக்க பின்புறமாக பாய்ந்த சமயம் நானும் பின்புறமாக பாய்ந்தேன். இச்சமயம் கார் மிக வேகமாக கிளம்பியது. முதலாம் எதிரி 4ம் எதிரியிடம் பணப்பையைக் கொடுத்தார். முதலாம் எதிரி காரினுள் ஏறும்போது ஏற்கனவே மற்றைய இருவரும் காரினுள் ஏறிவிட்டனர். முதலாம் எதிரி காரின் பின்புற-வலதுபுற கதவால் ஏறினார். முதலாம் எதிரி ஏறியதும் கார் வேகமாகச் சென்றது

பின்னர் நாம், சுற்றிலும்

(5-ம் பக்கம் பார்க்க)

சாட்சிக் கூண்டிலிருந்து

## 'ஞாபகமில்லை' என்று கூறுவது பொலிசாரின் வழக்கம்

### 'சிவா' குறுக்கு விசாரணை

சாட்சியை சிரேஷ்ட சட்டத்தரணி திரு எம். சிவசிதம்பரம் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: இராமநாயக்காவை கூப்பிட்டபின்னர்தான் அவர் சைக்கிளைப் போட்டுவிட்டுவந்தார். அப்போதுபணம் பறிக்கப்பட்டுவிட்டது? - இழுபறிப்பட்டபோது கூப்பிட்டேன்.

சட்: முதலாம் எதிரியுடன் இழுபறிப்பட்டபோது தான் இராமநாயக்காவைக் கூப்பிட்டதாக சற்றுமுன் கூறினீரா? ஞாபகமில்லை.

சட்: உம்மை நோக்கி துப்பாக்கியை நீட்டியபின்னர் தான் கூப்பிட்டீர்?

ஆம்

சட்: அது சரியா? சைக்கிள் தள்ளப்பட்டு பணம் பறிக்கப்பட்ட சமயம் நான் கூப்பிட்டேன்

சட்: அவரிடம் பாய்ந்து அவர் துப்பாக்கியை நீட்டிய பின்னர்தான் கூப்பிட்டேன் என்று நீர் முன்னர் கூறியது தவறு?- ஆம்.

சட்: கூப்பிட்டதும் அவர் வந்து முதலாம் எதிரியை கொலரில் பிடித்து இழுத்தார் என்று பொலிசாருக்கு வாக்கு மூலம் அளித்தீரா?- ஞாபகமில்லை.

சட்: ஞாபகமில்லையென்று சாட்சிக் கூண்டில் நின்று சுலபமாகக் கூறிவிடுவது பொலிசாரின் வழக்கம்.

சட்: இராமநாயக்க முதலாம் எதிரியைப்பிடித்தபோது நீரும் அவரைப் பிடித்தீரா?- இல்லை.

(5-ம் பக்கம் பார்க்க)

### மக்கள் கருத்து

## மயிலிட்டி வைத்தியசாலையின் அவலநிலை

தற்போது மயிலிட்டி அரசினர் வைத்தியசாலையில் சுமார் 170 நோயாளிகள் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவ்வளவு தொகையான நோயாளிகள் சிகிச்சைபெற்று வந்தபோதும் அவர்களைக் கவனிப்பதற்கு ஒரே ஒரு பெண் டாக்டர் மட்டுமே வைத்தியசாலையில் கடமையாற்றுகிறார்.

அவருடைய கடமை நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வைத்தியசாலையைக் கவனிப்பதற்கு அங்கு யாரும் இருப்பதில்லை இதனால் நோயாளர்கள் பெரிதும் சிரமப்பட வேண்டியுள்ளது காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையிலுமே அவர் கடமையாற்றிவருகிறார்.

நோயாளிகளை கவனித்து அவர்களுடைய நோய்க்கு மருந்து வழங்க டாக்டர்கள் இல்லையே என்ற கவலையுடன் இருந்தால் அவர்கள் வழங்கும் உணவே நோயைக் கூட்டுவதற்கு வழிவகுக்கும்போல் தெரிகிறது. அழுகிய கத்தரிக்காயையும் பொன்னாங்காணிக் கீரையையும் மட்டுமே தினமும் அவித்துப்போட்டுவருகிறார்கள். ஒருவாரத்தில் இரண்டு நாளாவது மீன்காண்பது அரிதிலும் அரிதாகவேயுள்ளது. முன்னர் முட்டையும் வழங்கப்பட்டது ஆனால் இப்போது 15 நாட்களாக அதுவும் வழங்கப்படவில்லை.

சாப்பாடு மாத்திரமல்ல குடிதண்ணீருக்கும் நோயாளிகள் மிகுந்த சிரமப்பட வேண்டியுள்ளது. தண்ணீர் இறைக்கும் மோட்டர் மாதத்தில் இரண்டுமுறையாவது பழுதடைந்துவிடுகிறது பல வழிகளாலும் கஷ்டமுறும் நோயாளிகளின் குறைகளைத் தீர்க்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக கவனம் செலுத்தவேண்டும்.

செ. கிறீஸ்ரி
[பாதிப்புற்றநோயாளி]
யாழ்ப்பாணம்.


மேசன் வேலைக்கான சீமெந்து



அதிக பட்சி

மேசன் வேலைக்கான சீமெந்து

★ வேலை நயம்
★ குழைமம்
★ ஒட்டுந் தன்மை

மனை நிர்மாணத்துறையில் ஒரு நவீன அம்சமாகும். இது சிக்கனமானது, மலிவானது, அமெரிக்க சீமெந்துச் சங்கத்தின் நுணுக்கமான தர நிர்ணயத்துக்கு அமைவானது, இதனை போட்லண்ட் சீமெந்தைப்போலவே பாவிக்கலாம். சீமெந்து / மணல் விகிதாசாரம் போர்ட்லண்ட் சீமெந்துக்குப் போலவேயாகும்.

மேசன் வேலைக்கான சீமெந்தைக் கொண்டு கட்டிடச் செலவைக் குறையுங்கள்.

● கொங்கிறீட் வேலைக்கு பயன்படுத்தப்படுவதற்கல்ல.

மேசன் வேலைக்கான சீமெந்தின் விலை 50 கி. இறும் பை.

புத்தளம் அல்லது காங்கேசன்துறை தொழிற்சாலையிலிருந்து ரூபா 14/90

காலி தொழிற்சாலையிலிருந்து ரூபா 17/80

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்,
தபால் பெட்டி - 1382, சுதந்திர சதுக்கம்,
கொழும்பு—7. தொலைபேசி: 95628 95801—4

# "சாதிப்பிரச்னை முழுச்சமுதாயத்தின் பொதுப்பிரச்னை இதைத்தீர்க்க சகலரும் ஒன்றுசேர வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

சாதிப்பிரச்னை சம்பந்தமாக இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி (மாவோ சார்பு) யாழ் பிரதேசக்கிளை மாவட்டச் செயலாளர் திரு. அ. வயித்திலிங்கம் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்.

கறுப்புப்பட்டி அணிவதனாலோ, பிரார்த்தனை செய்து வழிபாடு நடத்துவதினாலேயோ அல்லது துக்கதினம் அனுஷ்டிப்பதினாலேயோ சாதிவெறிப் பிரச்னைக்குப் பயனுள்ள தீர்வுகாணமுடியாது எனத்திடமாக நம்புகிறோம். உண்மையாகவே இப்பிரச்னையைத் தீர்த்துவைக்கவேண்டுமெனில் நிலமற்ற குடியிருப்பாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், வாழ்தொழில்செய்ய நிலம் சொந்தமாக்கப்படவேண்டும். இதுசம்பந்தமாகச் சட்டரீதியாகவும், வெகுஜன இயக்கங்கள் மூலமும் உரியநடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். பொருளாதாரசமத்துவம் கல்வியிலும் உத்தியோகத்திலும் சமசந்தர்ப்பம் அதை உறுதிப்படுத்த வசதிகளும் ஏற்படுத்தப்படவேண்டும்.

இதை எந்த ஒரு சாதியினராலும் தீர்த்துவைக்கும் பிரச்னையாக நாம் கருதவில்லை. இது முழுச்சமுதாயத்தினுடைய பொதுப்பிரச்சினையாகும். எனவே, இதைத் தீர்த்துவைக்கச் சகல இயக்கங்களும் அரசியல் கட்சிகளும், நல்லெண்ணம் படைத்த தனிநபர்களும் ஜனநாயகசக்திகளும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். இந்த பனிதகுல இழிவுத்தனத்திற்கு எதிராக கடுமையான போராட்டத்தில் சகலரும் ஈடுபடவேண்டும். இப்படியான இயக்கத்தை நடத்தும் சகல இயக்கங்களுடனும் கம்யூனிஸ்ட்கட்சி ஒருங்கிணைந்து நிற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவர்களை எங்களுடன் ஒத்துழைக்கும் படியும் கேட்டுக்கொள்கின்றோம்."

## அண்ணாமலைப் பல்கலைக்கழக இலங்கைக்கிளை பழைய மாணவர்சங்கம்

[யாழ்ப்பாணம்]

அண்ணாமலை பல்கலைக்கழக பழைய மாணவர் மன்ற இலங்கைக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ் வை எம் சீ ஏ மண்டபத்தில், பேராசிரியர் ஆறு அழகப்பன் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: வித்துவான் க ந வேலன், உதவித்தலைவர்: புலவர் வேல்மாறன், செயலாளர்; புலவர் திருமதி பூரணம் ஏனுதிநாதன், துணைச்செயலாளர்: சங்கீதபூஷணம் மு நவரத்தினம், பொருளாளர்: சங்கீதபூஷணம் பொன் சுந்தரலிங்கம், செயற்குழு உறுப்பினர்கள்: சங்கீதபூஷணம் திரு சிவராமலிங்கம், சங்கீத பூஷணம் செல்வி ஆறுமுகம், புலவர் சைவ சோமாஸ்கந்தன், சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை, சங்கீதபூஷணம் க ஜெயரத்தினம், சங்கீதபூஷணம் க பாலசிங்கம், சங்கீதபூஷணம் மூழ்கம் முருகையா. [செ]

## வள்ளுவர் விழா இன்று

[உரும்பராய்]

உரும்பராய் இந்துக்கல்லூரி வள்ளுவர் மன்றத்தினர் நடத்தும் வள்ளுவர்விழா இன்றுகாலை கல்லூரி ஆராதனை மண்டபத்தில் மன்றக்காப்பாளர் திரு. சி தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

கலாநிதி அ சண்முகதாஸ், திருமதி கலையரசி சின்னையா ஆகியோர் சிறப்புரையாற்றுவர். (கு)

# பிற்போக்குச் சக்திகளை முறியடிக்கதேர்தலை பயன்படுத்த வேண்டும்

[உடுப்பிட்டி]

"கடந்த 20 வருடகாலமாக யாழ்ப்பாணத்தில் யு. என். பி. காலெடுத்து வைக்கவில்லை. இப்பொழுது யு என். பி. யாழ்ப்பாணத்தில் தளம் அமைத்துள்ளது ஆனால் 1956ம் ஆண்டிற்கு முன்பிருந்தே இடதுசாரிக் கட்சிகளுக்கு யாழ்ப்பாணத்தில் ஆதரவு இருந்துகொண்டுவருகின்றது"

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளரும், இடதுசாரித் தொழிற்சங்கப் பிரமுகருமான திரு. பொன். குமாரசாமி இடதுசாரி ஐக்கிய முன்னணியை வடமராட்சியில் அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் வதிரி தமிழ் மன்ற மண்டபத்தில் லங்கா சமசமாஜக்கட்சிப் பிரமுகர் டாக்டர் எஸ் எஸ். மாவிலாமணி தலைமையில் நடைபெற்றது

திரு. பொன். குமாரசாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- "இடதுசாரிக் கட்சிகளில் இலங்கை மக்கள் அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். 1947-ம் ஆண்டு இடதுசாரிக் கட்சிகளினால் நடாத்தப்பட்டவேலை நிறுத்தங்களின் பிரதிபலனாகவே 1948ம் ஆண்டு இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது 1953 ஆவணியில் இடதுசாரிக்கட்சிகளின் ஹர்த்தால் போராட்டம் 1956ம் ஆண்டு யு. என். பி. யைப் படுதோல்வி அடையச் செய்தது.

"இந்த அனுபவங்களில் இருந்து வர்க்கப்போராட்ட மூலமே மேலெழுந்து செல்வதற்கு மக்கள் இடதுசாரிக் கட்சிகளுக்கு வாக்களிக்க முன்வருவார்கள். எனவே இடதுசாரிக் கட்சிகளை ஒன்றுபடுத்தி பலப்படுத்த வேண்டியது எமது முதற்கடமையாகும். பிற்போக்குச் சக்திகளை முறியடிக்க தேர்தலையும் ஒரு கருவியாகப்" பாவிக்கவேண்டும்

சட்டக்கல்லூரி மாணவன் திரு. சிவகுருநாதன் பேசும்பொழுது கூறியதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தென்னிலங்கையில் இடதுசாரிக் கட்சியை ஆதரிக்கும்படி கூறிவருகின்றனர். ஆனால் கூட்டணி எம். பி. களில் ஒருவரான உடுப்பிட்டி எம். பி. திரு த. இராஜலிங்கம் இடதுசாரிக் கட்சிகளைத் தாக்கிவருகின்றார் இது தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு வித்தையாகும் என்பதில் சந்தேகமில்லை.

வடமராட்சியிலுள்ள இடதுசாரிக்கட்சிகளை ஒன்றிணைத்து ஐக்கியமுன்னணி உருவாக்கியது பற்றிய தீர்மானத்தின் பிரதிகளை லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப் பீடங்களுக்கு அனுப்பிவைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

## உலக கிண்ண கிரிக்கட்: இந்தியா தோல்வி

லண்டன், ஜூன். 14

உலக கிண்ண கிரிக்கட் போட்டியில் இந்தியக்கோஷ்டியை வெற்றிபெற்ற நியூஸிலாந்து அரை இறுதிப்போட்டிக்குத் தெரிவானது.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் இந்திய. நியூஸிலாந்து ஆட்டம் மட்டுமே முடிவு பெற்றது.

மழை காரணமாக இலங்கை-மேற்கிந்திய, இங்கிலாந்து-கனடா ஆட்டங்கள் நடைபெறவில்லை. ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் ஆட்டம் இடையில் நிறுத்தப்பட்டது. இந்த ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை தொடர்ந்து நடைபெறுகின்றன

இந்திய-நியூஸிலாந்து ஆட்டத்தில் நியூஸிலாந்து 8 விக்கட்டுகளால் வெற்றிபெற்றது

முதலில் ஆடிய இந்தியா 55-3 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்து ஆடிய நியூஸிலாந்து 60 ஓவர்களில் 2 விக்கட்டுகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

பாக். 7-286

ஆஸி. 0-17

பாகிஸ்தான் - ஆஸ்திரேலிய ஆட்டத்தில் முதலில் ஆடிய பாகிஸ்தான் 60 ஓவர்களில் 7 விக்கட் நஷ்டத்திற்கு 286 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்து ஆடிய ஆஸ்திரேலியா ஆட்டநேரமுடிவில் விக்கட் இழப்பின்றி 17 ஓட்டங்களைப் பெற்றது. (இ)

## டெலிவிஷனில் நாதஸ்வரக் கலாநிதி

லண்டன், ஜூன் 14

ஈழத்து நாதஸ்வரக் கலாநிதி திரு. என். கே பத்மநாதனின் இசைநிகழ்ச்சி யொன்று கடந்த 10-ந் திகதி பாரிஸ் நகரில் இடம்பெற்றது.

அதற்கு சில தினங்களுக்கு முன் வி. பி. சி. 'தமிழ் ஓசை'யில் திரு. பத்மநாதனின் பேட்டி இடம்பெற்றது. லண்டன் டெலிவிஷன் காட்சியிலும் திரு. பத்மநாதனின் இசைநிகழ்ச்சி காட்டப்பட்டது.

கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் திரு பத்மநாதன் போகவிருக்கிறார்.


விவசாயிகளுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

# "அம்புஷ் 25"

இருமிநாசினி மூலம் வெங்காயத்தில் பச்சைப்புழுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெங்காயத்தில் பச்சைப்புழுத்தாக்கம் (SPODOPETRA) மிகவும் மோசமாக உள்ளது. அதற்குத் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனே எடுக்காவிடில் உங்களது முழுப்பயிரும் நாசமாகிவிடும்.

வெங்காயம் முளைத்த நாளில் இருந்து "அம்புஷ் 25" விசிறுங்கள். தொடர்ந்து 30 நாட்களுக்கு 5 நாட்கள் இடைவெளியில் விசிறுதல் வேண்டும். 30 நாட்களின் பின்னர் 14 நாட்கள் இடைவெளியில் விசிறல் வேண்டும்.

அம்புஷ் 25 பச்சை புழு முட்டைகளை அறவே அழிக்க வல்லது. ஆகவே நீங்கள் தாமதியாது அம்புஷ் 25தை விசிறுங்கள். ஒரு அவுன்ஸ் அம்புஷ் 25 மருந்தை 10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும்.

இக்கலவையுடன் ஏதாவது ஒரு ஒட்டும் தன்மையுடைய மருந்தினையும் கலந்து விசிறவும்.

ஒரு கலன் கலவையுடன் ஒரு அவுன்ஸ் ஒட்டும் மருந்தினைக் கலக்கவும்.

"அம்புஷ் 25" மருந்தினை மாத்திரமே பாவியுங்கள். வேறு எவ்வித கிருமிநாசினிகளுடனும் கலக்க வேண்டாம். அம்புஷ் 25தை அதிகாலையிலோ அல்லது மாலையிலோ விசிறவும்.

மேலதிக விபரங்கட்கு தொடர்பு கொள்ளுங்கள் !

CIC

கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,

த. பெ. இலக்கம் 352,

கொழும்பு - 1.

Rio (Jaffna) Phone: 7607
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p m
New Adventure of Ilusive

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சக்கரவர்த்தி திருமகன்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம் ஜி.ஆர் - ஜெயலலிதா
சௌகார் ஜானகி நடித்த
ஒ ளி வி ள க் கு
புதிய பிரதி சகிதங்களர்

24-வது வாரம்
வின்சர் (கொட்டடியானை)
போன் 465
தினசரி 4 காட்சிகள்
10-30, 3-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(சகிதங்கள் கலர்)

3-வது ஜனத்திரள் வாரம்
நாளை நாளை என்று நாளைப் பின்போடாது
இன்றே கண்டு களிக்கத் தவறுதீர்கள்
ஸ்ரீதர் (வட்டுக்கோட்டை)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
முத்துராமன் - தேவிகா
கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
குறிப்பு: யாழ்நகரில் இதுவே கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.
(புதிய பிரதி)

A GRAND RELEASE!
SHANTHI JAFFNA Daily: 5 Shows
(Phone 7642) 10-30, 2-30, 4-45, 7-00, 9-30 P.M.
Peter Sellers, Christopher Plummer
in
"The Return Of The PINK PANTHER"
Cinemascope — Colour
Robbery—Suspence—Comedy & Karate Fight
Ran over 100 days in Colombo

REGAL (Jaffna)
Daily at 2-00 4-30, 7-00 & 9-30 p. m. only
Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
மனோகரா (யாழ்நகர்)
எம். ஜி. ஆர். - ராஜகுமாரி நடித்த
குலேபகாவலி
(புத்தம்புதிய பிரதி)

ராணி (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் - கல்பனா
சாது மிரண்டால்
(புதிய பிரதி)
அடுத்த வெளியீடு எம். ஜி ஆர். நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி [illegible]
சனி, ஞாயிறு [illegible]
ஜெய்சங்கர்
வைராக்கியம்

லிடோ (யாழ். நகர்)
போன் 7894 தினசரி காட்சிகள்
ஜெமினி—சாவித்திரி
அதிசயத்திருடன்


# கொள்ளையரை இரு...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கார் ஒன்றுக்காகப்பார்த்தோம் அச் சமயம் பொலிசார் தனி யார் கார் ஒன்றில் 'ஹோர்ன்' அடித்தபடி வேகமாக வந்த னர். அவர்களிடம் பணம் கொள்ளையடிக்கப்பட்டுவிட்ட தாகவும் கொள்ளையரின் காரை தொடரும்படியும் நான் சைகை காண்பித்தேன் அந்தக் கார் சென்றுவிட வேறொரு காருக்காக செல்ல லடிப்பக்கம் நாம் வந்தோம்.

## சி. ஐ. டி. பொலிசாரின் கார்

சாந்திதியேட்டர் முன் ஏழூர் பக்கம் நோக்கியபடி கறுப்புநிற 404 கார் ஒன்று நின்றது. தியேட்டரிலிருந்து 75 யார் தூரத்தில் வாழைச் சேனைப் பக்கம் நின்றது. அக் காரினுள் இருந்தவர்கள் பார்த்திருந்தால் சம்பவம் நடந்தது தெரிந்திருக்கவேண் டும் அக் காரைத் தாண்டியே கொள்ளையர் சென்றனர். அக் காரினுள் இருந்தவர் சி ஐ டி பொலிசார் என்பதை அறிந் தேன், சாந்தி ஹோட்டலுக்கு முன்பாக அக்கார் நின்றது முதலில் அக்காரினுள் எவ ரும் இருக்கவில்லை, காரில் வந்தவர்கள் ஹோட்டலின் உள் இருந்தனர்.

நான் ஹோட்டலுள் இருந்த போது இன்ஸ்பெக்டர் தங்க வேலு ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தார். அவர் இர கசிய புலன்விசாரணையில் ஈடு பட்டிருப்பவர் என்பது தெரி யும். அவரிடம் நான் காரைத் திருப்பும்படி கேட்டேன். நானும் இராமநாயக்காவும் இன்ஸ் பெக்டர் பெர்னாண்டோ சார் ஜன்ட் மகேந்திரா ஆகியோரும் இன்ஸ்பெக்டர் தங்கவேலுவும் செங்கலடிப் பக்கமாக அக் காரில் சென்றோம். சுமார் 6 மைல்கள் நாம் சென்றோம், அப்போது கொள்ளையரினதும் பொலிசாரினதும் கார் இரு சருகே சுமார் 200 யார் தூரத் தில் செல்வதைக் கண்டோம் நாம் மேலும் வேகமாகச் சென்றோம் உன்னிச்சை சந் திக்கு அருகாமையாக நாம் சென்றுகொண்டிருந்தோம் கார்கள் இரண்டும் உன் னிச்சைப் பக்கம் திரும்பின, கொள்ளையரின் கார் முன்னே சென்றுகொண்டிருந்தது,

நாமும் அவ்வழியே சென் றோம், உன்னிச்சை வீதியில் சுமார் 1/4 மைல் சென்ற போது கான்ஸ்டபிள் உபாலி எம்முடைய காரை அவ தானித்தபோது நான் துவக்கை காருக்கு வெளியே நீட்டி னேன், எம்மை முன்பாக செல்லும்படி அக் காரிலிருந்து எமக்கு சமிக்ஞை காட்டப் பட்டது. நாம் முன்பாகச் சென்றோம். கொள்ளையரின் காரை சுமார் 1/4 மைல் தூரம் பின்தொடர்ந்தோம்.

## காட்டினுள் இறங்கி ஓடினர்

நாம் நெருங்கும்போது தமது காரை றோட்டின் வலதுபுற மாக நிறுத்திய எதிரிகள் நால்வரும் இறங்கி காட்டி னுள் பணப்பையுடன் ஓடி னர். நானும் இராமநாயக்கா வும் முதலாம் எதிரியின் பின் பாக ஓடினோம் நாம் அவர் மீது அவர் வைத்திருந்த பிஸ் டலை பறிப்பதற்காகப் பாய்ந் தோம். நான் பாய்ந்து முத லாம் எதிரியை அடித்தேன். அப்போது எனக்கு எதிராக அவர் பிஸ்டலை நீட்டி னார். அங்கு கிடந்த தடியை எடுத்து அவருக்கு அடித்தேன்.

## பிஸ்டல் கீழே விழுந்தது

3, 4 தடவை நான் அடித்த தும் பிஸ்டல் கீழே விழுந்தது. அவரை நாம் மடக்கிப்பிடித் தோம். அப்போது அவர் கத்தி ஒன்றை எடுத்தார். அப்போதும் அவரை மடக்கி எமது பாதுகாப்பில் எடுத் தோம். அப்போது அவரின் வலது கையில் இருந்து இரத் தம் கசிவதைப் பார்த்தேன். அவர் வைத்திருந்த பிஸ்டல், கத்தியை நான் பாரமெடுத் தேன் முதலாம் எதிரியை இன்ஸ்பெக்டர் பெர்னாண் டோவிடம் ஒப்படைத்தோம். அப்போது 2ம் எதிரி இரகசிய பொலிசாரின் பாதுகாப்பில் இருப்பதைக் கண்டேன் பின் நாம் காரில் பொலிஸ்நிலையம் வந்தோம். அப்போது பிப 2-30 மணியிருக்கும் எனக்கு சில உரோஞ்சுதல் காயங்கள் ஏற்பட்டன இராமநாயக்கா வுக்கு இவ்வித காயங்கள் ஏற்பட்டன.

## சுவீப் முடிவுகள்

[கொழும்பு]

கொழும்பு தேசிய லொத்தர் சபையில் அதிர்ஷ்டம் பார்க் கப்பட்ட 724-வது சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
**01 B 0381**
ரூ 100,000

இரண்டாவது பரிசு
**24 W 0772**
ரூ. 40,000

மூன்றாவது பரிசு
**07 D 0985**
ரூ. 10,000

தலா 1659 ரூபா கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் பெறும் டிக்கட்டுகளின் விவரம்:

| | |
|---|---|
| 05 A 0891 | 15 A 0146 |
| 24 A 0053 | |
| 01 B 0635 | 22 B 0335 |
| 36 B 0772 | |
| 09 C 0575 | 12 C 0858 |
| 13 C 0962 | 16 C 0339 |
| 20 C 0914 | 22 C 0582 |
| 24 C 0123 | 27 C 0423 |
| 29 C 0016 | 32 C 0759 |
| 13 D 0710 | 22 D 0469 |
| 23 D 0788 | 32 D 0947 |
| 05 E 0696 | 30 E 0469 |
| 04 F 0273 | 09 F 0902 |
| 13 F 0901 | 21 F 0535 |
| 22 F 0079 | |
| 17 G 0384 | 21 G 0393 |
| 28 G 0677 | 34 G 0621 |
| 36 G 0756 | |
| 05 H 0483 | 16 H 0439 |
| 20 H 0071 | 21 H 0434 |
| 01 J 0134 | 08 J 0565 |
| 15 J 0341 | 26 J 0846 |
| 29 J 0596 | |
| 04 K 0857 | 05 K 0669 |
| 22 K 0578 | 22 K 0801 |
| 23 K 0885 | 26 K 0327 |
| 29 K 0603 | |
| 06 L 0622 | 14 L 0279 |
| 17 L 0281 | 19 L 0784 |
| 19 L 0904 | 36 L 0030 |
| 13 M 0056 | 18 M 0765 |
| 24 M 0408 | |
| 19 O 0209 | 24 O 0371 |
| 31 O 0284 | |
| 02 P 0485 | 36 P 0685 |
| 06 Q 0869 | 31 Q 0954 |
| 21 R 0962 | |
| 04 S 0874 | 24 S 0099 |
| 03 T 0349 | 04 T 0934 |
| 06 T 0796 | 16 T 0139 |
| 20 T 0860 | 25 T 0087 |
| 25 T 0970 | |
| 01 U 0315 | 02 U 0628 |
| 17 U 0588 | 18 U 0955 |
| 04 V 0747 | 09 V 0930 |
| 17 V 0659 | 19 V 0942 |
| 27 V 0275 | 33 V 0554 |
| 14 W 0047 | 35 W 0105 |
| 09 X 0232 | 21 X 0184 |
| 24 X 0388 | 34 X 0847 |
| 35 X 0470 | |
| 12 Y 0472 | 19 Y 0303 |
| 20 Y 0169 | 25 Y 0495 |
| 01 Z 0582 | 09 Z 0509 |
| 15 Z 0717 | 22 Z 0858 |
| 29 Z 0399 | |

[இவை யாவும் உறுதிப்படுத் தப் படவேண்டியவை]


ராஜா (கன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - சிவாஜி
உனக்காக நான்


# ஞாபகமில்லை என்று...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்: ஆகவே, நீரும் இராம நாயக்காவும் ஒருமித்து எந்த ஒரு சமயத்திலும் முதலாம் எதிரியை பிடிக்கவில்லை?- காட் டில் ஒருமித்துப்பிடித்தோம்.

சட்: காட்டுக்குப் பின்னர் செல்வோம் சாந்தி தியேட்டர் அண்மையில் பிடித்தீர் களா?- இல்லை

சட்: நீங்கள் இருவரும் ஒவ் வொரு திசையிலிருந்து 1ம் எதிரியை நோக்கிபோனீர்கள்? -ஆம்.

சட்: பொலிசாருக்கு சம்ப வம் நடந்து இரண்டாம் நாள் அளித்த சாட்சியத்தில் இருவ ரும் ஒன்றாகப்பிடித்தோம் என கூறினீரா?-ஞாபகமில்லை.

சட்: இன்று இங்கு கூறியது உண்மையெனின் பொலிசா ருக்குக் கூறியது உண்மையாக இருக்கமுடியாது?

சட்: முதலாம் எதிரி வைத் திருந்த பிஸ்டல் இயங்குமா இயங்காதா என அன்று பார்த் தீரா?- ஞாபகமில்லை

சட்: இராமநாயக்காவை நோக்கி விசையைத் தட்டியதும் அது வெடிக்காது சிறிய சத் தம் மாத்திரம் ஏற்படுத்திய தாக பொலிசாரிடம் கூறி னீரா?- ஞாபகமில்லை.

## சாட்சி மௌனம்

சட்: பிஸ்டல் வெடிக்காது என்று தெரியாதிருந்திருந்தால் 1ம் எதிரியைப் பிடிக்கமுயன் றிருக்க மாட்டீர்?-(மௌனம்)

சட்: 2ம், 3ம் எதிரிகளையும் நோக்கி நீர் போனதாக பொலிஸ் முறைப்பாட்டில் கூறினீரா?-ஞாபகமில்லை

சட்: காலம் போகப்போக ஞாபகசக்தி கூடுமா? குறை யுமா?- என்னால் இதற்கு பதில் கூறமுடியாது.

சட்: இவர்களைக் கைது செய்தபின் நீரும் இராம நாயக்காவும் பொலிஸ் நிலை யத்திலேயே தங்கியிருந்தீர் கள்?-ஆம்.

சட்: 19ந் தேதி காலை 5 மணிக்கு நீர் முறைப்பாடு கொடுத்தீர்?- ஆம்.

சட்: அப்போது மூன்று எதி ரிகளும் கைதுசெய்யப்பட்டு, காரும் கைப்பற்றப்பட்டுவிட் டது?- ஆம். நான் முறைப் பாடு கொடுக்கும்போது எதிரி களுக்கு காயமிருந்தது தெரி யும்.

சட்: 4ம் எதிரியை சம்பவத் தின் பின் எப்போது சந்தித் தீர்?- இன்றுதான்.

சட்: முதன்முதலாக சம்பவ தினம்தான் 4ம் எதிரியை அது வும் காரினுள் இருக்கக் கண் டீர்?-ஆம்

சட்: பொலிஸ் முறைப் பாட்டில் காரின் இலக்கத் தைக் கூறினீரா?- ஞாபக மில்லை.

சட்: எப்போது சார்ஜன்டி டம் கார் இலக்கத்தைக் கூறி னீர்?- கார் கைப்பற்றப்பட்ட பின்னர்.

சட்: நன்றி-

சட்: 17ந் தேதி காலை சார் ஜன்ட் சில பணிப்புரைகள் கூறியதாக கூறினீர்?- ஆம்.

சட்: சார்ஜன்ட் கூறியதில் இருந்து எத்தகைய கொள்ளை நடக்கப்போகிறது என்று உமக் குத் தெரியுமா? ஆம்.

சட்: அத்தகைய கொள்ளை நடந்தால் என்ன நட வடிக்கை எடுக்கவேண்டுமென கூறினார்?- சாதாரண உடை யில் எம்மைப போகும்படியும் ஏனையோர் ஆயுதங்களுடன் வருவதாகவும் கூறினார்

சட்: எனவே உங்களுக்கு அருகில் வேறு பொலிசாரும் நிற்பர் என்பது உமக்குத் தெரியும்?- ஆம்

[6ம் பக்கம் பார்க்க]

# பாடசாலையில் தவறிவிழுந்த மாணவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வகுப்பறையைக் கூட்டுவதற்கு மேலே செருகி வைக்கப்பட்டிருந்த துடைப்பத்தடியை எடுக்க ஏறிய மாணவர் தவறி விழுந்து மரணமானார்.

நல்லூரைச் சேர்ந்த துரைரத்தினம் பாஸ்கரன் (14 வயது) என்ற மாணவரின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

கனகரத்தினம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த இந்த மாணவன் இம்மாதம் 8-ந் திகதி தவறி விழுந்தபோது அருகே நின்ற ரகுநாதன் என்ற மாணவன் அதிபருக்கு அறிவித்ததாகவும் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார் எனவும் விசாரணையில் கூறப்பட்டது. விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [க]

# 'ஈரானில் அரசு இல்லை என்கிறார் மன்னர் ஷா

மெக்ஸிக்கோ ஜூன் 14

ஈரானில் அரசாங்கம் ஒன்றும் இப்போது ஆட்சியில் இல்லை என்று ஈரானிய மன்னர் ஷா அறிவித்தார்.

தற்போது மெக்ஸிக்கோவுக்கு 60 மைல் தொலைவிலுள்ள குலறவர்காவில் தமது மனைவி மகளுடன் வசித்துவரும் மன்னர் ஷா ஈரானில் இரத்தக்களரி ஏற்படாமல் தடுக்கவே தான் ஈரானைவிட்டு வெளியேறியதாகவும் ஆனால் இப்போதும் இரத்தக்களரி ஏற்படுகிறது என்றும் கண்டனம்தெரிவித்தார். [கு]

# யாழ். குடாநாடு.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் சகல பாகங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர்கள் தமது இயக்கத்தின் நோக்கம்பற்றி வர்த்தகநிலையங்களிலும் பொது ஸ்தாபனங்கள் பாடசாலைகள் ஆகிய இடங்களுக்குச் சென்று விளக்கமளித்தனர்.

'சாதி ஒழிக' என்று கூறும் பிரசுரங்கள் எங்கும் ஒட்டப்பட்டிருந்தன. போராட்டத்தை அமைதியானமுறையில் கைக்கொள்ளுமாறு தெங்கு பனம்பொருள் உற்பத்திச்சங்கம் கூட்டுறவு ஊழியர் சங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணி, மகளிர்பேரவை, மாணவர் பேரவை, மனிதன் இயக்கம், செந்தமிழர் இயக்க மாணவர் அணி, அகிலஇலங்கை இந்துமாமன்றம், வாழ்வர்த்தகர்சங்கம் ஆகியன கோரிக்கை விடுத்துள்ளன.

நாளை மறுதினம் 17ந் திகதி கைதடிச் சந்தியில், அறவழிப் போராட்டக் குழுவின் ஏற்பாட்டில் 1,000 பேர் உண்ணாவிரதமிருப்பர். மாலை யாழ திறந்தவெளியரங்கில் பொதுக் கூட்டமும் நடைபெறும். [செ

# இவர்களுக்கு விரைவில் வேலைவாய்ப்பு

## மாவட்ட அமைச்சர் உறுதி

[யாழ்ப்பாணம்]

பலாலி அனிஷ் - பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத்துறையில் 'டிப்ளோமா' பட்டம் பெற்று கடந்த 9 ஆண்டுகளாக வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு விரைவில் வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

யாழ் மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ ஆர் எம் மன்சூர் நேற்றுமுன்தினம் தம்மைச் சந்தித்த மேற்படி பட்டதாரிகள் குழுவினரிடம் மேற்கண்டவாறு உறுதி அளித்தார்.

திரு வி துரைராஜலிங்கம் தலைமையில் சென்ற குழுவே அமைச்சரைச் சந்தித்து உரையாடியது

யாழ் கச்சேரியில் இடம் பெற்ற இச்சந்திப்பின்போது அமைச்சர் பட்டதாரிகளின் குறைகளை மிகக்கவனமாகக் கேட்டறிந்த பின்னர் மேற்கண்டவாறு உறுதிஅளித்தார். பட்டதாரிகள் குழுவில் சென்ற திரு மு வாமதேவன், பட்டதாரிகள் கடந்த 9 ஆண்டுகளாக வேலையின்றி கஷ்டமுறுவதாகத் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு ஜெகநாதன் அமைச்சரின் இணைப்பதிகாரி திரு ஏ எஸ் செல்வரத்தினம் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். [இ]

# வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

[யாழ்ப்பாணம்]

வலி இழக்கு (வடபகுதி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் கடன் பகுதி முகாமையாளர் தெரிவை ஆட்சேபித்து கடந்த 8ம் திகதி ஆரம்பித்த வேலைநிறுத்தம் கோப்பாய் எம் பி திரு இ கதிரவேலுப்பிள்ளையின் தலையீட்டினால் கடந்த திங்களன்று கைவிடப்பட்டது

எம் பியின் தலையீட்டை அடுத்து யாழ். கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் குறிப்பிட்ட நியமனத்தை பரிசிலனை செய்வதாக பணியாளர்களிடம் உறுதி அளித்துள்ளார்

# தமிழர் வாழ்வு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பி எஸ். சேவியர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

இதில் முன்னோடியாக விளங்கும் சாவகச்சேரி அறப் போராட்டக்குழு, இலங்கை இந்து இளைஞர் இயக்கம் மற்றும் சமூக அரசியல் நிறுவனங்கள் அனைத்திற்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தம்மையே ஒரு ஹரிஜனன் என்று அழைத்துக்கொண்டு தான் மகாத்மா காந்தியடிகள் தீண்டாமையை எதிர்க்கப் போர்க்கொடி தூக்கினார்.

சாதிக் கொடுமைகளுக்கு எதிரான எழுட்புப்பட்டி அணியும் இயக்கம் உண்ணாவிரதப் போராட்டங்கள் வெகுஜன இயக்கங்களாக முழுத்தமிழ்இனத்தையும் அணைத்துச் செல்வதால் வெற்றி உறுதி. தமிழர்வாழ்வு சிறக்க இம் மறுமலர்ச்சிக்கான நடவடிக்கைகளில் அனைவரும் தமது பங்கைச் செலுத்தவேண்டுகிறேன்.

(செ)

# இல்ல விளையாட்டுப் போட்டி

[கிளிநொச்சி]

உருத்திரபுரம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் வித்தியாலய மைதானத்தில் நடைபெறுகிறது.

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

# ஜே. பிக்கு பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சமாதான நீதவானாக நியமனம் பெற்ற திரு ஆ. சி. கணேசவேலுக்கு சந்தரோடை மக்களால் நடாத்தப்படும் பாராட்டுவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

சந்தரோடை, வற்றாக்கை விசாலாட்சி விசுவநாதன் கோவில் முன்றலில் ஆசிரியர் திரு க. புவனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் சுன்னாகம் பொலிஸ் அதிபர் திரு. பெ. ர. சுகுனேந்திரன், உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். சி செபநாயகம், மானிப்பாய் எம். பி. திரு வி தர்மலிங்கம், வி. பொன்னம்பலம் ஆகியோர் உரையாற்றுவர்.

# ஆதரவு எங்கிருந்து வந்தாலும் புறக்கணிக்கலாகாது

## வெகுஜன இயக்கப் பிரமுகர் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

சாதிவெறிக்கும் தீண்டாமைக்கும் எதிராக எங்கிருந்து ஆதரவானகுரல்கள்வந்தாலும் அவற்றைப் புறக்கணிப்பதோ அல்லது கண்டனம் தெரிவிப்பதோ தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் குறிக்கோளுக்கு விரோதமாகும் என மேற்படி இயக்கத்தின் உப தலைவர்களான திருவாளர்கள் சி. நவரத்தினம், த. தருமலிங்கம், இணைச்செயலாளர் திரு. இ. செல்வநாயகம் ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளனர். அவ்வறிக்கையின் விபரம் வருமாறு!

சாதி அடக்கு முறைக்கும் தீண்டாமைக்கும் எதிராகப் போராட்டங்கள் நடத்துவதன் மூலமே ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் அடிப்படையான கொள்கையாகும். அதே வேளை சாதி வெறிக்கும் தீண்டாமைக்கும் எதிராக எங்கிருந்து ஆதரவான குரல்கள் வந்தாலும் அவற்றைப் புறக்கணிப்பதோ அல்லது கண்டனம் தெரிவிப்பதோ வெகுஜன இயக்கத்தின் குறிக்கோளுக்கு விரோதமானதாகும். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் கடந்த காலத்தில் பின்பற்றிய சரியான கொள்கையினால்தான் ஒடுக்கப்பட்ட மக்கள் உயர் சாதி நல்லெண்ணம் கொண்ட மக்களின் ஆதரவோடு தமது போராட்டங்களில் வெற்றி பெற்று உரிமைகளைப்பெற முடிந்தது என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும் எனவே மிகக் கஷ்டமான சூழ்நிலையிலும் பல் சக்திகளை ஐக்கியப்படுத்தி சரியான தந்திரோபாயங்களைக் கையாண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களை முன்னெடுத்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் சார்பில் சிலர் தான் தோன்றித்தனமாக அறிக்கைகளை வெளியிட்டு வெகுஜன இயக்கத்தையும் ஒடுக்கப்பட்ட மக்களையும் தனிமைப்படுத்த எடுக்கும் முயற்சிகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக பரந்த அளவில் இயக்கங்களை முன்னெடுத்த வெகுஜன இயக்கத்தை குறிப்பிட்ட சிலர் தமது குறுகிய நோக்கங்களுக்குப் பயன்படுத்த முயற்சிப்பதற்கு எதிராக விழிப்பாக இருக்கும்படியும் ஒடுக்கப்பட்ட மக்களை வேண்டுகிறோம்.

# ஞாபகமில்லை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்! சைக்கிள் கடையில் இருந்து காரவரைக்கும் இராமநாயக்க, காசரனர் இருவரும் முன்பாக போனார்?- ஆம்.

சட்! எவ்வளவு தூரம் இப்படிச் சென்றீர்கள்? சுமார் 1/2 மைல் தூரம்,

சமி! எவ்வளவு தூரத்தில் நீர் காரை முதன்முதல் கண்டீர்?- சுமார் 800 யாரில்.

சட்! அப்போது காரின் பின்புறமாக மூவர் நின்றனர்? ஆம்.

சட்! உமக்கு ஏதாவது ஐயம் அப்போது எழுந்ததா?- ஆம்

சட்! இராமநாயக்காவுக்கு உமது ஐயத்தை வெளிப்படுத்த முயன்றீரா?- இல்லை

சட்! ஆயுதங்களுடன் பொலிசார் அவ்விடங்களில் நிற்கிறார்களா என அவதானித்திரா? இல்லை.

## ஆயுதம் வைத்திருந்தீர்களா?

சட்! சார்ஜன்டும் உங்களுக்கு தற்பாதுகாப்புக்கு ஆயுதம்தேவை என கேட்டீரா?- இல்லை

சட்! கொள்ளை நிகழ்ந்தது காரைத் தாண்டிச்சென்றபின்? இல்லை

சட்; அப்போ எப்பொழுது? காருக்கு 15, 20 அடி பின் பக்கமாக.

சட்: காரில் சாய்ந்துகொண்டிருந்த மூவரும் செங்கலடிப் பக்கமாக உங்களைத் திரும்பித் திரும்பி பார்த்தபடி சென்றதாகவும் அப்போதுதான் கணேசலிங்கத்தை தள்ளியதாகவும் கூறினீர். அப்போ எப்படி காருக்கு பின்பக்கம் இக் கொள்ளை நிகழ்ந்திருக்க முடியும்? நான் 10, 20 அடி காருக்கு பின்பக்கம் சென்றுகொண்டிருந்தபோது நடந்தது

சட்! சந்தர்ப்பத்துக்கேற்ப, கூறியதைத் திரிக்க முயலவேண்டாம்.

(இக்கட்டத்தில் விசாரணை மறுநாள் வரை ஒத்திவைக்கப்பட்டது )

# பரிசளிப்பு விழா

[சுழிபுரம்]

வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினர் 'நிலையக்குரல்' ஆதரவில் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் உற்சவத்தையொட்டி நடாத்திய கந்தரனுபூதி மனனப் போட்டி, கட்டுரைப்போட்டி ஆகியவற்றில் வெற்றிபெற்றவர்களுக்குரிய பரிசளிப்பு இன்று வெள்ளிக்கிழமை பகல் பறாளையில் நடைபெறும். சங்காபிஷேக தினமான இன்று பிற்பகல் ஆசிரியர் மு தம்பையயா தலைமையில் பரிசளிப்பு வைபவம் நடைபெறும்.

# சன்சோனி கமிஷன்

## கால எல்லை நீடிப்பு

[கொழும்பு]

ஆகஸ்ட் கலவரங்கள்தொடர்பாக விசாரணை நடத்திவரும் சன்சோனி கமிஷனின் விசாரணைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகள் மீண்டும் கண்டியில் இம்மாதம் 25ம் திகதி ஆரம்பமாகி அடுத்தமாதம் 20ம் திகதிவரை நடைபெறும்

# வடக்கிலிருந்து..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு எஸ், ஏ. செனவிரத்தின தலைமையில் பொலநறுவை எம். பி திரு. சுனிதரஞ்சித் ஜெயக்கொடி உட்பட பலர் வரவேற்றனர்.

பொலனறுவை மாவட்டத்தில் இரண்டு நாள் தங்கியிருக்கும் இக்குழுவினர், பல சரித்திர முக்கியத்துவமான இடங்களையும் கலை நிகழ்ச்சிகளையும் கண்டுகளிப்பர். [செ]

# சுதுமலையில் "இசைகானம்" இன்று

(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய தமிழ் திரைப் படபாடகர்கள் இன்று மாலை சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் இன்னிசை விருந்தளிப்பர்.

இந்த இசைக்கான நிகழ்ச்சியில் திருச்சி லோகநாதனின் புதல்வன் திரு சி. எம். மகாராஜன், ரி. எம். சௌந்தரராஜனின் மகன் ரி. எம். எஸ். செல்வகுமார், இளம் திரைப் படபாடகி செல்வி லதா ருக்மணிதேவி ஆகியோர் கலந்துகொள்வர்.

இக்கச்சேரி கடந்த நாலாம் திகதி நடைபெறவிருந்ததாயினும் கலைஞர்களுக்கு விசா வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அன்றைய தினம் கச்சேரியை நடத்த முடியாமல் இருந்ததாக திருவிழா உபயகாரர் எமது நிருபரிடம் தெரிவித்தனர்.

இசைக்கலைஞர்கள் நேற்று மாலை இலங்கை வந்துள்ளனர். [செ]

# பல குற்றச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் வைத்து அடைக்கப்பட்டு கடையொன்றின் பின்புறம் உள் வீட்டுக்கோடியில் புதைக்கப்பட்ட நிலையில் பொலிசார் மீட்டுள்ளனர்.

பொலிசாரால் கைசெய்யப்பட்ட அமிர்தலிங்கம், செல்வரத்தினம், ரவீந்திரன், மகாலிங்கம் ஆகியோரைப் பொலிசார் தேடுதல் நடத்திய போது அவர்களிடம் சிக்காமல் பல இடங்களிலும் தலைமறைவாகத் திரிந்தார்களாம் வங்கிக் கொள்ளை, சங்கக் கடைக் கொள்ளை ஆகியவற்றிலும் வேறுபல பயங்கரவாதச் செயல்களிலும் இவர்கள் ஈடுபட்டிருக்கலாமெனவும் பொலிசார் சந்தேகப்படுகின்றனர்.

இக்கோஷ்டியின் தலைவர் எனக்கருதப்படும் செட்டி என்றழைக்கப்படும் கல்வியங்காட்டைச் சேர்ந்த தனபாலசிங்கம் என்பவர் வேறு வழக்குகள் சம்பந்தமாக ஏற்கனவே கைசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

யாழ் தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெனி குணசேகரா மேற்படி விசாரணையை மேற்கொண்டுள்ளார்.

சந்தேகநபர்கள் நால்வரும் விசாரணையின் பொருட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். [கொ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No' 49, Telegrams: Eelanaadu T e; 288.